பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 12 2025    THURSDAY  6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, கிராமப்புற பொருளாதாரம் மேம்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

2. மலேரியா காய்ச்சலால் ஏற்படும் உயிரிழப்புகள் பெருமளவு குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

3. இயேசு பிரான் அவதரித்த நாளான கிறிஸ்துமஸ் பண்டிகை இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

4. வடகிழக்கு பருவமழை, பருவம் தவறி பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, மாநில பேரிடர்

நிவாரண நிதியிலிருந்து 290 கோடி ரூபாய் வழங்க தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

5. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் குறித்து, திமுக தவறான தகவல்களை பரப்பி வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

>>>>>>><<<<<<<

மத்திய அரசு மேற்கொண்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, கிராமப்புற பொருளாதாரம் மேம்பட்டு வருவதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் குறித்து, சுயஉதவி

குழுக்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் காணொலி மூலம் அவர உரையாற்றினார்.

இந்த சட்டத்தின் கீழ், அதிக எண்ணிக்கையிலான பெண்கள் பயனடைவார்கள் என்று அவர் கூறினார்.

மகளிருக்கு பணி ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை அளிக்கும் வகையில், சிறப்பு வேலைவாய்ப்பு உறுதி அட்டைகள் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஊரகப் பகுதிகளிலிருந்து நகரப்புறத்தை நோக்கி இடம் பெயர்வதை குறைப்பதற்கும், கிராமப்புற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் இந்த திட்டம் உதவிடும் என்று திரு. சிவராஜ் சிங் கூறினார்.

>>>>>>><<<<<<<

நாட்டில் மலேரியா காய்ச்சலால் ஏற்படும் உயிரிழப்புகள் பெருமளவு குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, மலேரியாவால் ஏற்படும் பாதிப்புகள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

30 ஆயிரத்திற்கும் அதிகமான ஆயுஷ்மான் சுகாதார மையங்கள், தேசிய தரநிலை சான்று பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

நாடுமுழுவதும் காசநோயால் ஏற்படும் பாதிப்புகள் குறைந்துள்ளதாகவும், இது, உலக அளவிலான சராசரியை காட்டிலும் கூடுதலாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக, பச்சிளம் குழந்தைகளின் உயிரிழப்பு விகிதமும் குறைக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டம் காரணமாக, மக்களின் மருத்துவச் செலவு குறைந்துள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

வடகிழக்கு பருவமழை மற்றும் பருவம் தவறி பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 290 கோடி ரூபாய் வழங்க தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக, மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன்மூலம் 5 புள்ளி ஆறு ஆறு லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு

இந்த நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு. எம்ஆர்கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

வளர்ச்சியடைந்த இந்திவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் குறித்து, திமுக தவறான தகவல்களை பரப்பி வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், ஏற்கனவே நடைமுறையில் இருந்த திட்டத்தில், பல்வேறு

மாற்றங்களை செய்து, இந்த புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறினார்.

பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளை மறைத்து, மக்களை திசை திருப்பும் வகையில், பொய்யான செய்திகளை திமுக பரப்பி வருவதாக திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.

>>>>>>><<<<<<<

இயேசு பிரான் அவதரித்த நாளான கிறிஸ்துமஸ் பண்டிகை இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது

இதையொட்டி குடியரசு தலைவர், மக்களவைத் தலைவர் தலைவர்கள் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மனிதகுலத்தின் நலனுக்காக இயேசு பிரான்

செய்த தியாகத்தை நாம் ஒவ்வொருவரும் நினைவுகூர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த பண்டிகை அமைதி, நல்லிணக்கம், சமத்துவம் மற்றும் சேவை மனப்பான்மையை மக்களிடையே உருவாக்கட்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மகிழ்ச்சி, அமைதி மற்றும் அன்பு நிரம்பிய பண்டிகையாக கிறிஸ்துமஸ் திகழ்வதாக தெரிவித்துள்ளார்.

இந்தப் பண்டிகை, ஒவ்வொருவருக்கும் வெற்றி மற்றும் வளங்களை சேர்க்கட்டும் என்று அவர் கூறியுள்ளார்.

வாட்டிகன் நகரில் நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனையில் போப் ஆண்டவர் லியோ கலந்து கொண்டார்.

தமிழகத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை ஒட்டி, சென்னை உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் உள்ள தேவாலயங்கள் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வண்ணமயமாக காட்சியளிக்கின்றன.

நள்ளிரவு நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனைகளில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சென்னை சாந்தோம் தேவாலயம், பெசண்ட் நகர் வேளாங்கண்ணி மாதா ஆலயம், எழும்பூர், பாரிமுனை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள தேவாலயங்களிலும் சிறப்பு திருப்பலிகள் நடைபெற்றன.

கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி, சென்னை விமான நிலையம் வண்ண விளக்குகளாகல் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் உள்ள புகழ்பெற்ற பனிமயமாதா பேராலயத்தில் நடைபெற்ற நள்ளிரவு பிரார்த்தனையில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன்- 35 செகண்ட்ஸ்)

பாளையங்கோட்டை தூய சவேரியார் பேராலயம், கத்தீட்ரல் பேராலயம் உள்ளிட்ட நெல்லை மாவட்டத்தின் அனைத்து தேவாலயங்களிலும், தென்காசி தூய மைக்கேல் தேவாலயத்திலும் நள்ளிரவு பிரார்த்தனைகள் விமரிசையாக நடைபெற்றன.

நாகை மாவட்டம், வேளாங்கணண்ணி மாதா பேராலயத்தில் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் - 40 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறையையொட்டி நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது

இதன் காரமணாக, நீலகிரி மாவட்டத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் - 50 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

கிழக்கு டோன்பஸ் பகுதியிலிருந்து பரஸ்பரம் இருதரப்புப் படைகளை விலக்கிக் கொள்வது என்ற புதிய அமைதி ஒப்பந்த முன்மொழிவை யுக்ரைன் அதிபர் திரு விலோடிமிர் ஜெலன்ஸ்க்கி வெளியிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

நேபாளத்தில் அடுத்த ஆண்டு மார்ச் 5-ம் தேதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு உகந்த சூழலை உருவாக்குவது என அந்நாட்டு அரசும், முக்கிய அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

>>>>>>><<<<<<<

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள இடைக்கால ஜாமீனை அந்நாட்டு நீதிமன்றம் நீட்டித்துள்ளது.

>>>>>>><<<<<<<

ராஜ்மார்க் இன்ஃப்ரா முதலீட்டு அறக்கட்டளை நிறுவனத்தின் சொத்துக்களைப் பணமாக்கும் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் திட்டத்திற்கு இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் - SEBI ஒப்புதல் வழங்கியுள்ளது.

>>>>>>><<<<<<<

ஓய்வூதியம் தொடர்பான நீண்டகால பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அதற்கான இணையதளம் முக்கிய பங்கு வகிப்பதாக பொது குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதிய துறைச் செயலர் திருமதி ரச்னா ஷா தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

மஹாராஷ்டிரா மாநிலத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள சுகாதார பணியாளர்களை முறைப்படுத்துவதற்கான திட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

>>>>>>><<<<<<<

சென்னை சைதாப்பேட்டையில் புதிதாக கட்டப்பட்டுள்ள தூய்மைப் பணியாளர்களுக்கான உணவுக் கூடத்தை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

>>>>>>><<<<<<<

திண்டுக்கல் மாவட்டம் அகரம், தாடிக்கொம்பு பேரூராட்சிகளில் 1.79 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளை மாநில அமைச்சர் திரு பெரியசாமி தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஆட்சி மொழி சட்ட வாரவிழாவை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<<

கொசஸ்தலை ஆறு வடிநிலப் பகுதிக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வெள்ள மேலாண்மைத் திட்டத்தின் கீழ், திருநங்கையர்களுக்கான பேரிடர் அபாயக் குறைப்பு பயிலரங்கு சென்னையில் நேற்று நடைபெற்றது.

>>>>>>>END<<<<<<<